1969 மார்ச் 20]

கோவை நகரசபை ஊழியர்களுக்கு ஓய்வூதியம்

*394 வினா.—திரு. என். மருதாசலம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை நகரசபை ஊழியர்களுக்கு பென்ஷன் திட்டம் அமலாக்குவதென முடிவு செய்யப்பட்ட அந்நகரசபையின் 1966-ம் ஆண்டு ஜூன் மாதம் 28-ம் தேதியிட்ட தீர்மானம் எண் 298 சர்க்காருக்கு அனுப்பப்பட்டு உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன்மேல் சர்க்கார் எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) ஆம்.

(இ) இது குறித்து அரசாங்கம் பரிசீலித்து வருகிறது.

திரு. என். மருதாசலம் : இந்த நகராட்சியிலுள்ள உபாத்தியாயர்களுக்கு நாம் பென்ஷன் கொடுக்கிற மாதிரி, நகராட்சியிலுள்ள சிப்பந்திகளுக்கு பென்ஷன்' திட்டம் கொண்டுவருவதற்கு 1966-ம் வருடம் இந்த நகரசபை ஒரு தீர்மானம் போட்டு அரசுக்கு அனுப்பியுள்ளது. முன்னுலிருந்த அரசாங்கம் அதைக் கொடுக்காவிட்டாலும், இந்த அரசாங்கத்திற்காவது இந்தப் பென்ஷன் திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவருவதற்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : இது கோவை நகராட்சிக்கு மட்டும் தொடர்புடையது அல்ல. மாநிலத்திலுள்ள எல்லா நகராட்சி மன்றங்களையும் பொறுத்து, மாநில ரீதியிலே முடிவு எடுக்கக்கூடிய ஒன்றாகும் இது. ஆகவே, மாநிலத்திலுள்ள நகராட்சி மன்றங்களின் நிதிநிலையை அடிப்படையாக வைத்து அந்தக் காரியங்களைப் பரிசீலிக்கவேண்டியிருக்கிறது. என்றாலும், அரசாங்கம் கனிவோடு இவைகளைப் பரிசீலித்துப் பார்க்கும் என்றுதான் நான் ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறேன். நிச்சயம் சட்டத் திருத்தங்கள் வருகிற நேரம், எந்த அளவுக்கு சாத்தியப்படுமோ அந்த அளவுக்கு பரிசீலித்து நியாயம் வழங்க அரசாங்கம் எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும்.

திரு. டி. மார்டின் : மிஸ்டர் ஸ்பீக்கர் ஸார், ஆன் எ பாயிண்டு ஆஃப் பெர்ஸனல் எக்ஸ்ப்ளனேஷன். உரம் சம்பந்தமாக நான் கேள்வி கேட்கும்பொழுது தூத்துக்குடி உரத் தொழிற்சாலை நிறுவுவதில் லாபம் ஏற்படுமா, நஷ்டம் ஏற்படுமா என்பதைப்பற்றி மறுபரிசீலனை செய்யுமாறு அதைத் தொடங்க இருப்பவர்களுக்கு ஏதாவது தாக்கீது வந்துள்ளது அரசுக்குத் தெரியுமா என்று மட்டும்தான் கேட்டேன். தூத்துக்குடி உரத் தொழிற்சாலை தொடங்கப்படவேண்டாம் என்ற பொருளில் நான் கேட்கவில்லை. ஆனால், அமைச்சர் அவர்கள் பதில் கூறும்பொழுது ஏதோ நான் தூத்துக்குடி உரத் தொழிற்சாலை தொடங்கப்படக்கூடாது என்ற அர்த்தத்தில் கேட்டதாகக் கூறினார்கள். அவ்வாறு கூறுவது நியாயமில்லை.

‘ It is very uncharitable.’

என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படிக் கூற வேண்டாம். அப்படிச் சொல்லவில்லை என்று சொல்லுங்கள். குற்றம் சாட்டிச் சொல்ல வேண்டியதில்லை.

வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு —ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்].